வது அப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டால் கட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டாலும் குறிப்பிட்ட காலம்வரையில் பணம் கட்டாவிட்டாலும் வைத்திய வசதி கொடுக்கவேண்டுமென்ற முடிவுதான் எடுக்கப்பட்டிருக்கிறது.

வெளியூர் பஸ்களில் பெயர்ப்பலகை.

* 546 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

வெளியூர்களுக்கு செல்லும் சாதாரண பேருந்துகளில் அவைகள் போகின்ற ஊர்களை அறிவிக்கின்ற பலகைகள் மாட்டப்படும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தமிழ் நாடு அரசு போக்குவரத்துறை பேருந்து செல்லும் வழியிலுள்ள ஊர்களின் பெயர்கள் அனைத்தையும் பேருந்தின் மீது எழுதுவது நடைமுறையில் இயலாது என்பதால், அவ்வாறு எழுதும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : இந்த ஊர் பெயர்களை பக்கத்திலே தனியாக ஒரு பலகையில் எழுதி காட்டுகிற வகையில் செய்யலாம். குறிப்பாக இப்போது வெளி ஊர்களுக்குச் செல்லும் பஸ்களுக்கும் சென்னை நகரில் ஓடுகிற பஸ்களுக்கும், எந்தவிதமான வேறுபாடும் தெரிவதில்லை. ஆகவே, கிராமப்புற ஜனங்கள் எந்த பஸ் வருகிறது என்று தெரிந்து கொள்ள முடியாமல் சென்னை நகரில் பஸ் ஏறுகிறபோது தொல்லைக்குட்படுவதை உத்தேசித்து இந்த பஸ்களின் வர்ணத்தையாவது மாற்றுவதற்கு ஏதாவது உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தனியார் துறையில் ஓடுகிற பேருந்துகளில் பக்கவாட்டில் அவைகள் செல்கிற ஊர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்பது தெரிந்ததே. ஆனால் அரசுத் துறையில் ஓடுகிற பேருந்துகள் அடிக்கடி வழித்தடங்கள் மாறுகிற காரணத்தினால் அப்படி பக்கவாட்டில் எழுதுவது என்பது இயலாத காரியமாக இருக்கிறது. ஆனால் பேருந்துகள் செல்கிற ஊர்கள், இடையிலுள்ள சில முக்கிய ஊர்கள் இவைகள் எல்லாம் பஸ் நெற்றியில் காண்பிக்கப்படுகின்றன.

திரு. கொளத்தூர் கோதண்டம்: :பக்கவாட்டில் எழுதுவதற்குப் பலகை இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வழித்தடங்கள் மாறுவதால் அப்படி எழுதுவதற்கு வசதியில்லை என்றார்கள். ஆனால் சிறு சிறு பலகைகளில் ஊர்களின் பெயர்களை எழுதி பாசஞ்சர் ஸீட்டுக்கு அருகில் உள்ள கம்பியில் அவற்றை மாட்டினால் தெரிந்துகொள்ளமுடியும். அதையாவது செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : உறுப்பினர் அவர்களின் கருத்து நன்றாகவேதான் தோன்றுகிறது. அது நடைமுறையில் சாத்தியமா என்பதைக் கவனிப்பேன்.

Mylapore Bus Stand.

* 552 *Q.*—**Thiru G. GOMATHY SANKARA DIKSHIDAR :** Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there are proposals to shift the Government bus terminus at Sri Kapaleeswarar Temple Tank, Mylapore, to Mandavalli ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) whether the views of the residents of the area have been obtained for this move ?